| English | Tamil |
|---|---|
| The ACT moved to Step 3.2 of Canberra’s Recovery Plan Easing of Restrictions Roadmap **9am on Friday 9 October 2020**. | *ACT-இல் நடைமுறையிலுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது குறித்த Canberra’s Recovery Plan-இன் படிமுறை 3.2,* ***அக்டோபர் 09 2020 வெள்ளிக்கிழமை காலை 9 மணியிலிருந்து*** *நடைமுறைக்கு வருகிறது.* |
| **Top level summary of changes** | ***உயர்மட்ட மாற்றங்களின் சுருக்கம்*** |
| • All gatherings can increase to 200 people, where one person per four square meters can be maintained.<br>• Medium-sized hospitality venues with total usable space between 101 and 200 square metres can have a maximum of 50 people throughout the venue (excluding staff).<br>• Large indoor seated venues (for example, Canberra Theatre and Llewellyn Hall) can have ticketed events up to 50% capacity, up to 1,000 people, provided they have a COVID Safe Plan for each specific event.<br>• Cinemas and movie theatres can sell up to 50% capacity of each theatre, up to 200 people.<br>• Enclosed outdoor venues with permanent tiered seating and grandstands can have up to 50% capacity, up to 1,000 people.<br>• GIO Stadium and Manuka Oval can have crowds up to 50% capacity with an appropriate COVID Safe Plan in place. | • *நான்கு சதுர மீட்டருக்கு ஒருவர் என்ற விதியைப் பேணமுடியுமெனில், அனைத்து ஒன்றுகூடல்களிலும் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கையை 200 நபர்களாக அதிகரிக்கலாம்.*<br>• *101 முதல் 200 சதுர மீட்டருக்கு இடைப்பட்ட அளவில் மொத்தமாக பயன்படுத்தக்கூடிய இடத்தைக் கொண்ட, நடுத்தர அளவிலான விருந்தோம்பல்துறைசார்ந்த இடங்கள், அதிகபட்சமாக 50 பேரைக் கொண்டிருக்கலாம் (ஊழியர்களைத் தவிர).*<br>• *இருக்கைகளைக் கொண்ட பெரிய உட்புற இடங்கள் (எடுத்துக்காட்டாக கன்பரா தியேட்டர் மற்றும் Llewellyn Hall) தமது மொத்த கொள்ளளவின் 50 வீதத்திற்கு மாத்திரம் ஆட்களை அனுமதித்து- 1000 பேர் வரை- டிக்கட் அடிப்படையிலான நிகழ்வுகளை  நடத்தமுடியும். ஒவ்வொரு குறிப்பிட்ட நிகழ்விற்கும் COVID Safe திட்டத்தை வைத்திருக்க வேண்டும்.*<br>• *சினிமாக்கள் மற்றும் திரையரங்குகளில் ஒவ்வொரு தியேட்டரினதும் 50 வீத கொள்ளளவு வரை-200 பேர் வரை- டிக்கட்டுகளை விற்க முடியும்.*<br>• *நிரந்தரமாக வரிசைப்படுத்தப்பட்ட இருக்கைகள் மற்றும் grandstand-களுடன் கூடிய மூடப்பட்ட வெளிப்புற அரங்குகள் 50 வீத கொள்ளளவு வரை ஆட்களை அனுமதிக்கலாம் - 1000 பேர் வரை-*<br>• *GIO ஸ்டேடியம் மற்றும் Manuka Oval ஆகியவை பொருத்தமான COVID Safe திட்டத்துடன் 50 வீத கொள்ளளவுக்கு ஆட்களை அனுமதிக்கலாம்.* |

| | |
|---|---|
| • Businesses, venues and facilities that are required to collect information for contact tracing are strongly encouraged to use an electronic method to collect information. The free Check In CBR app is available to fulfil this requirement. | • *Contact tracing* நோக்கத்திற்காக தொடர்பு தகவல்களைச் சேகரிக்கவேண்டிய வணிகங்கள், இடங்கள் மற்றும் வசதிகள் இத்தகவல்களைச் சேகரிக்க மின்னணுசார் முறையைப் பயன்படுத்துமாறு வலுவாக ஊக்குவிக்கப்படுகின்றன. இந்த தேவையை பூர்த்தி செய்ய இலவச Check In CBR app கிடைக்கிறது. |
| **What stays the same** | **என்னென்ன மாறாமல் அப்படியே இருக்கும்** |
| All previous requirements under **Step 3.1** remain in place, in particular: | **படிமுறை** 3.1 இன் கீழ் உள்ள முன்னைய அனைத்து விதிமுறைகளும், குறிப்பாக: |
| • No limit on household visits.<br>• All venues, facilities and businesses must clearly display occupancy allowance at the entrance to the venue and each individual usable space, where separate spaces exist.<br>• Venues, facilities and businesses must develop and follow a COVID Safety Plan.<br>• Where relevant, specific business categories are required to request and keep contact information from patrons and visitors. **Electronic collection is preferred.** The free Check In CBR app is available to fulfil this requirement. | • வீட்டிற்கு வருகை தருபவர்களின் எண்ணிக்கைக்கு வரம்பு இல்லை.<br>• அனைத்து இடங்களும், வசதிகளும், வணிகங்களும் தாம் அனுமதிக்கக்கூடிய அதிகபட்ச வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை தத்தம் நுழைவாயில்களிலும், தனித்தனியாக பயன்படுத்தக்கூடிய ஒவ்வொரு இடத்திலும் கட்டாயம் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.<br>• இடங்கள், வசதிகள் மற்றும் வணிகங்கள், ஒரு COVID Safety Plan-ஐ உருவாக்கி அதைப் பின்பற்ற வேண்டும்.<br>• பொருத்தமான இடத்தில், சில குறிப்பிட்ட வணிகப் பிரிவுகள் தம்மிடம் வரும் வாடிக்கையாளர்கள் மற்றும் பார்வையாளர்களின் தொடர்பு விவரங்களைக் கேட்டு அவற்றை வைத்திருக்க வேண்டும். **மின்னணுசார் சேகரிப்பு முறை (Electronic collection) விரும்பப்படுகிறது**. இந்த தேவையை பூர்த்தி செய்ய இலவச Check In CBR app கிடைக்கிறது. |

| **We all need to continue to be responsible** | **நாம் அனைவரும் தொடர்ந்து பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்** |
|---|---|
| The requirements under the Public Health Directions are not just the responsibility of businesses - they extend to all Canberrans. | *Public Health Directions*-இன் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவது வணிகங்களின் பொறுப்பு மட்டுமல்ல - அவை அனைத்து கன்பராவாசிகளினதும் பொறுப்பாகும். |
| We must all be sensible when having people in our homes and put in place our own control measures. This includes knowing who is there and at what times, and downloading the COVIDSafe app. | வீட்டில் ஆட்கள் இருக்கும்போது, நாம் விவேகத்துடன் நடந்துகொள்வதுடன் நமக்கான சொந்த கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும். நமது வீட்டில் யார் இருக்கிறார்கள், எந்த நேரத்தில் இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வதையும் *COVIDSafe app* ஐ தரவிறக்குவதையும் இது உட்படுத்துகிறது. |
| Importantly, we must maintain our best lines of defence against the disease by physically distancing, practising good hand and respiratory hygiene, staying home if unwell and getting tested if you have symptoms. | முக்கியமாக, சமூக இடைவெளியைப் பேணுவதன் மூலமும், நல்ல கை மற்றும் சுவாச சுகாதாரத்தை கடைப்பிடிப்பதன் மூலமும், உடல்நிலை சரியில்லாமல் இருந்தால் வீட்டிலேயே தங்கி, அறிகுறிகள் இருந்தால் பரிசோதனை செய்வதன் மூலமும், நோய்க்கு எதிரான சிறந்த பாதுகாப்பை நாங்கள் தொடர்ந்தும் பேண வேண்டும். |
| These principles have not changed and are the best way to keep our community safe and to prevent the spread of COVID-19. | இந்த கொள்கைகள் மாறவில்லை என்பதுடன், இவையே எங்கள் சமூகத்தை பாதுகாப்பாக வைத்திருக்கவும், *COVID-19* பரவுவதைத் தடுக்கவும் சிறந்த வழிகளாகும். |